15.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 216/2020 ) திரு.சுடலைமணி.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. –

1) எனது அப்பா எங்களுடன் இருக்கிறாரா அல்லது தனியாக இருக்கிறாரா என்றால் எங்களுடன் தான் இருக்கிறார். எங்களது சொந்தஊர் எது என்றால் திருமங்களக்குறிச்சி. எனது அப்பாவுக்கு ஆதாரர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, வங்கி பாஸ்புத்தகம் திருமங்களக்குறிச்சி கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி தபசில் சொத்தின் பேரில் தனது பெயருக்கு கயத்தார் சார்பதிவக அலுவலக ஆவண எண்.293/2014 ன் படி 22.01.2014 அன்று ஏற்படுத்தியுள்ள மோசடி கிரையத்தை ரத்து செய்து தபசில் சொத்துக்களுக்குரிய அசல் ஆவணங்கள் அனைத்தையும், பிரதிவாதியின் தகப்பனார் வசம்ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.வழக்கின் வாதி 09.11.2020 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால்சரிதான். அதற்கு நான் 23.11.2020 ம் தேதியிட்டு பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆக அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வாதியின் கிரைய ஆவணம் மோசடியானது என்று ரத்து செய்ய எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மின் இணைப்பு, குடி தண்ணீர் இணைப்பு ஆகியவை வாதியின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. வீட்டு வரிவிதிப்பு எனது தந்தையின் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா வாதிக்கு கிரையம் கொடுத்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் அடமானம் கொடுத்து 5 வருடங்கள் இருக்கும். நான் அடமானம் என்று கூறும் நிலையில் அடமானத்தை ரத்து செய்யக்கோரி அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. எனது தகப்பனார் வாதிக்கு கிரைய ஆவணம் தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனது அப்பாவுக்கு படிப்பறிவு இல்லை அடமானம் தான் கொடுத்தார். அடமானத்தை வாதி கிரையமாக எழுதிக்கொண்டார். வாதி பெயரில் ஏற்பட்ட ஆவணம் கிரைய ஆவணம் என்பதால் தான் அதை ரத்து செய்யவும் அடமானத்தை செல் அடிக்கவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாத வாடகை ரூ.3000/–த்திற்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பாக்கி வாடகை செலுத்தவும், தாவாச்சொத்யின் சுவாதீனத்தை ஒப்படைக்கவும் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
15.06.2026.